1967 நவம்பர் 24]

வேண்டுமென்றால் உயர் நீதிமன்றம் அதற்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும். மதுரை மாவட்டம் சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்றங்கள்தான் ஏராளமாக அந்த மஹாலிலே இருந்தன. அந்த மஹாலுக்கு ஆபத்து என்று இப்பொழுது அல்ல, பல ஆண்டுகளாகவே கூறப்பட்டு வருகின்றது. அந்த மஹாலை செப்பனிட மத்திய அரசும் பண உதவி செய்ய முன் வந்திருக்கிறது. ஆகவே, நீதி மன்றங்களுக்காகத் தனியாகவே புதுக் கட்டிடத்தைக் கட்ட உத்தேசித்து இருக்கிறோம். அப்பொழுது எல்லா நீதிமன்றங்களையும் அந்தப் புதிய கட்டடத்திற்குக் கொண்டு வந்து அதை மஹாலை சரித்திரப் பிரசித்தி பெற்ற இடமாக ஆக்க அரசாங்கம் முன் வந்திருக்கிறது.

*423 வின—திரு. கரு. சீமைச்சாமி: மதிப்பிற்குரிய சட்ட, கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரையில் புது கோர்ட் கட்டடங்கள் கட்டுவதற்கான இடம் தீர்மானிக்கப்பட்டுவிட்டதா ?

(இ) ஆம் எனில், இக் கட்டடங்களுக்கான எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டுவிட்டதா ?

(உ) எஸ்டிமேட் தொகை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(a) Yes, at Sengulam Tank Bed, Madurai.

(b) Yes.

(c) About Rs. 35 lakhs.

திரு. கரு. சீமைச்சாமி : சார், இந்தப் புதிய கட்டிடத்திலே இராமநாதபுரம் மாவட்டத்திற்கான அத்தனை கோர்ட்டுகளும் இருக்குமா ? அல்லது மதுரை மாவட்டத்திற்கு மட்டும் அதிலே செயல்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் முன்னரே கூறியபடி இராமநாதபுரம் என்று சொல்லும்போது சில நீதிமன்றங்கள் தான் மதுரையிலே இருக்கின்றன. அந்த நீதிமன்றங்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்படும் வரை இதே கட்டிடத்தில் தான் இருக்கும்.

*424 வின—திரு. நா. சௌந்தரபாண்டியன் : மதிப்பிற்குரிய சட்ட, கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில் ஒரு முன்சீப் கோர்ட் ஆரம்பிப்பதற்கான உத்தேசம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், இப்போது அது எந்த நிலையில் இருக்கின்றது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது நாங்குநேரி தாலுக்காவில் உள்ள மக்கள் 50 மைல் தூரத்திலுள்ள சேரன்மகாதேவிக்குப் போவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆதலால் அவர்களுக்கு வள்ளியூரில் ஒரு முனிசிபல் கோர்ட் ஏற்படுத்துவதற்கு இனிமேலாவது அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புதிய நீதிமன்றங்களை அமைப்பது என்றால், அதற்குப் போதுமான வழக்குகள் இருக்குமா என்பதைப் பற்றி உயர்நீதிமன்றம் கருத்துத் தெரிவிக்க வேண்டும். இந்த இடத்தில் நீதிமன்றம் ஏற்படுத்துவதைப் பொறுத்த வரை உயர்நீதி மன்றம் அதற்குத் தேவையில்லை என்ற கருத்தைக் கூறியிருக்கிறது.

* 425 வினா—திரு. நா. சௌந்தரபாண்டியன் : மதிப்பிற்குரிய சட்ட, கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரத்தில் ஒரு சப்-மாஜிஸ்திரேட் கோர்ட் நிறுவுவதற்கான உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் என்றால், எப்போது நிறுவப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இல்லை.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது நாங்குநேரியிலுள்ள சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் வாரத்திற்கு ஒரு நாள் ராதாபுரத்திற்கு வந்து வழக்குகளை விசாரிக்கிறார்கள். நாங்குநேரியில் அதிகமாக வழக்குகள் இருப்பதினால், கோர்ட்டார் அவர்கள் அங்கே வழக்குகளை விசாரிக்க வேண்டியிருக்கிறது, அடிக்கடி ராதாபுரத்திற்குப் போவது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அவ் வட்டார மக்களின் நன்மைக்காக ராதாபுரத்தில் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டு அமைப்பதற்கு அரசாங்கம் முற்படுமா ?

பகல் 11-30

மாண்புமிகு திரு. செ. மாதவன் : போதுமான வழக்குகள் அந்த நீதிமன்றத்திற்குக் கிடைக்கும் என்று தெரிந்தால் தான், அது பரிசீலனை செய்யப்படும்.

* 426 வினா—திரு. டி. மார்டின் : மதிப்பிற்குரிய சட்ட, கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நெல்லை மாவட்டத்திலுள்ள சாத்தான்குளத்தில் சப்-மாஜிஸ்திரேட் கோர்ட் ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் தற்சமயம் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.